## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

# வருடாந்த செயல் அடைவு அறிக்கை

# 2012

Curriculum
Assessment & Evaluation
Teaching
Learning
N E T S

ஆய்வுகளுக்கும், அபிவிருத்திக்குமான கிளை,
தேசிய மதிப்பீட்டுக்கும், ஆராய்ச்சிக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

# இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் வருடாந்த செயல் அடைவு அறிக்கை – 2012

**பரீட்சைகள் திணைக்களத்தின் பங்களிப்பு :**

கடந்த காலத்தில் கல்விப் பணிப்பாளரினால் நியமிக்கப்பட்ட பொதுப் பரீட்சை சபையொன்றினால் இலங்கையில் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. 1949 ஆம் ஆண்டு இப்பணி கல்வி அமைச்சில் நிறுவப்பட்ட பரீட்சைகள் கிளைக்கு ஒப்படைக்கப்பட்டது. அதன் மூலம் அவ்வாண்டில் 78 பரீட்சைகள் நடாத்தப்பட்டன. 1951 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01 ஆம் திகதி குறித்த கிளை கல்வி அமைச்சின் கீழ் அமைந்த ஒரு திணைக்களமாக மாறியது. அதிலிருந்து அது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் என்ற பெயரால் பிரபலமடைந்தது.

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொதுப் பரீட்சைகள் திணைக்களம் நடாத்துவது தொடர்பான சட்டரீதியான அதிகாரமுள்ள ஒரே நிறுவனமாக மாறியது. அன்றிலிருந்து இன்றுவரை பரீட்சைகள் திணைக்களத்தின் பங்களிப்பு படிப்படியாக விரிவடைந்துள்ளது. தற்போது பரீட்சைகள் திணைக்களத்தினால் வருடாந்தம் 300 வரை எண்ணிக்கையான பரீட்சைகள் ஒழுங்கமைத்து நடாத்தப்படுகின்றன.

இன்று பரீட்சைகள் திணைக்களமானது தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சைகளுக்குமான சேவைகள் (National Education and Testing Service) NETS என்ற பெயரில் பாடசாலைப் பரீட்சைகள் தொடர்பான நிறுவனம் மற்றும் முகவர் நிறுவனம் (Agency Function) என்ற இரண்டு பிரிவுகளின் ஊடாக செயற்படுகின்றன.

மேற்படி இரண்டு நிறுவனங்களினதும் பணிகள் முக்கியமாக மூன்று பிரிவுகளினூடாகச் செயற்படுகின்றன.

1. பாடசாலைப் பரீட்சைகளுடன் தொடர்புடைய சேவைகள்.
2. முகவர் நிறுவன சேவைகள். (Agency Functions)
3. பொது சேவைகள். (Common Functions)

**01. பாடசாலைப் பரீட்சைகளுடன் தொடர்புடைய சேவைகள் வழங்கும் கிளைகள்.**

1.1. பாடசாலைப் பரீட்சைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் பெறுபேறுகள் கிளை.
1.2. அந்தரங்கக் கிளை
1.3. மதிப்பீட்டுக் கிளை
1.4. புலன் விசாரணைக் கிளை
1.5. சான்றிதழ் கிளை
1.6. ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக் கிளை

**02. முகவர் நிறுவனங்களின் (Agency Functions) பரீட்சைகளுடன் தொடர்புடைய சேவைகளை வழங்கும் கிளைகள்.**

2.1. ஒழுங்கமைத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை
2.2. அந்தரங்கக் கிளை
2.3. மதிப்பீட்டுக் கிளை
2.4. பெறுபேறுகள் கிளை

**03. பொது சேவைகளுடன் (Common Functions) தொடர்புடைய கிளைகள்.**

3.1. நிருவாகக் கிளை
3.2. தபால் கிளை
3.3. கணக்குக் கிளை
3.4. அச்சகம்
3.5. கணனிக் கிளை
3.6. தரவு நிரற்படுத்தும் கிளை
3.7. திட்டமிடல் மற்றும் வழிப்படுத்தும் கிளை

01. பாடசாலைப் பரீட்சைகளுடன் தொடர்புடைய சேவைகள்.

1.1. பாடசாலைப் பரீட்சைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் பெறுபேறுகள் கிளை.

பாடசாலைப் பரீட்சைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இக்கிளையின் வருடாந்த வேலைத் திட்டத்திற்கு ஏற்ப 2012.01.01 தொடக்கம் 2012.12.31 வரை ஒழுங்கமைத்து நடாத்தப்பட்ட பாடசாலைப் பரீட்சைகளும் பாடசாலைத் தொகுதியின் ஏனைய பரீட்சைகளும் பற்றிய தரவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பரீட்சை | மத்திய நிலையங்களின் எண்ணிக்கை | பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | பரீட்சை நடாத்தப்பட்ட கால எல்லை | பெபேறு வெளியிடப்பட்ட திகதி | பரீட்சை மேற்பார்வைப் பணியில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை புதிய பாடத்திட்டம் 2012 | 1,746 | 235,774 | 2012.08.06<br>2012.08.30 | 2013.01.31 | 4,070 |
| க.பொ.த. (உ.தர) ப் பரீட்சை பழைய பாடத்திட்டம் 2012 | 347 | 41,323 | 2012.08.06<br>2012.08.30 | 2013.01.31 | 902 |
| க.பொ.த. (சா.தர) ப் பரீட்சை 2012 | 4,048 | 542,260 | 2012.12.11<br>2012.12.20 | - | 9,170 |
| சாதாரண தொழில்நுட்பப் பரீட்சை - 2012 | 1,153 | 148,376 | 2012.10.21 | - | 2,796 |
| தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012 | 2,803 | 318,416 | 2012.08.26 | 2012.09.24 | 6,618 |
| பட்டதாரிகள் அல்லாத ஆசிரியர்களுக்கான பரீட்சை - 2011(2012) | 51 | 6,436 | 2012.09.20<br>2012.09.24 | - | 663 |
| ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை - 2012 | 10 | 945 | 2012.09.20<br>2012.09.24 | - | 130 |
| தேசிய கல்வியியல் கல்வி டிப்ளோமா வெளிவாரி இறுதிப் பரீட்சை 2011(2012) | 25 | 3,449 | 2012.02.27<br>2012.03.05 | 2012.08.09 | 295 |
| தேசிய கல்வியியல் கல்லூரிகளில் ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு பரீட்சார்த்திகளைத் தேர்ந்தெடுக்கும் பரீட்சை - 2011(2012) | - | - | - | - | - |
| பிரிவென் ஆசிரியர் இறுதிப் பரீட்சை | - | - | - | - | - |
| பட்டப் பின் கல்வி டிப்ளோமா (உள்வாரி) முழு நேர பாடநெறிக்கு ஆட்சேர்க்கும் பரீட்சை - 2012 | 07 | 902 | 2012.01.21 | 2012.06.06 | 76 |
| மொத்தம் | 10,190 | 1,297,881 | | | 24,720 |

மூலம் - பாடசாலைப் பரீட்சை ஒழுங்கமைப்பு மற்றும் பெறுபேறுகள் கிளை.

## 1.2. (பாடசாலைப் பரீட்சைகள்) அந்தரங்கக் கிளை

2012 ஆம் வருடத்தில் இக்கிளை மூலம் கீழே குறிப்பிடப்படுகின்ற பரீட்சைகள் தொடர்பாக இக்கிளையைச் சேர்ந்த சகல வேலைகளும், (பரீட்சகர் குழுக்களை நியமித்தலில் ஆரம்பித்து இணைப்பதிகாரிகள் / பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு வினாத்தாள் விநியோகித்தல், பொருத்தமான சமயங்களில் விடைத்தாள், மிகுதி விடைத்தாள் மற்றும் எழுது பொருட்கள் ஆகியவற்றை திணைக்களத்திற்கு திரும்பப் பெறல் வரை) நிறைவேற்றப்பட்டுள்ளன.

01. க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை – புதிய பாடத்திட்டம்

02. க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை – பழைய பாடத்திட்டம்

03. தரம் 5 புலமைப் பரீட்சை

04. க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை

05. ஆசிரிய கலாசாலை இறுதிப் (புதிய / பழைய) பரீட்சை

06. பட்டதாரிகள் அல்லாத பயற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சி பாடநெறியின் இறுதிப் பரீட்சை.

07. பொதுத் தொழில்நுட்பப் (GIT) பரீட்சை

மூலம் - அந்தரங்கக் கிளை (பாடசாலைப் பரீட்சைகள்)

## 1.3. மதிப்பீட்டுக் கிளை (பாடசாலைப் பரீட்சைகள்)

சகல பரீட்சைகளினதும் விடைத் தாள்களைப் பிழையின்றியும் இரகசியத் தன்மை பேணக்கூடியவாறும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தல் இக்கிளையின் மிகப் பிரதானமான பணியாகும். குறிப்பிட்ட தினத்திற்கே வினைத்திறமையுடனும், பிழையின்றியும் மதிப்பிட நடவடிக்கையெடுக்க விடைத்தாள் புள்ளியிடும் பரீட்சகர்களை அறிவுறுத்துதலும், மதிப்பிட்டு முடித்தலும் இக்கிளையின் மூலம் நடைபெறுகின்றது.

2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சகர்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருடம் | பரீட்சை | மதிப்பீட்டுக் குழுக்களின் தொகை | | | மதிப்பீடு நடைபெற்ற காலம் | மதிப்பீட்டில் பங்குபற்றிய பரீட்சகர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | | |
| 2011 | க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை | | | | 2011.12.29 - 2012.01.07 | |
| | I ஆம் கட்டம் | 1,017 | 374 | 287 | | |
| 2011 | க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை | 105 | 63 | 12 | 2012.01.21 - 2012.01.29 | 27,870 |
| | II ஆம் கட்டம் | - | - | - | | |
| | தனிப்பட்ட<br>தனிப்பட்டதல்லாத | - | - | - | | |
| 2012 | தேசிய கல்வியியல் டிப்ளோமா இறுதிப் பரீட்சை | 17 | - | 20 | 2012.04.21 - 2012.04.29 | 592 |
| | தேசிய கல்வியியல் டிப்ளோமா ஆட்சேர்க்கும் பரீட்சை | 06 | - | 10 | 2012.11.21 - 2012.12.18 | 256 |
| 2012 | க.பொ.த (உ.தர) ப் பரீட்சை | | | | 2012.10.07 - 2012.10.18 | |
| | I ஆம் கட்டம் (பழைய பாடத்திட்டம்) | 22 | 10 | 20 | | 780 |
| | I ஆம் கட்டம் (புதிய பாடத்திட்டம்) | 187 | 44 | 97 | | 4,920 |
| | க.பொ.த (உ.தர) ப் பரீட்சை | | | | 2012.10.25 - 2012.11.05 | |
| | II ஆம் கட்டம் (பழைய பாடத்திட்டம்) | 89 | 22 | 29 | | 7,260 |
| | II ஆம் கட்டம் (புதிய பாடத்திட்டம்) | 191 | 90 | 63 | | |
| | க.பொ.த (உ.தர)ப் பரீட்சை | | | | 2012.11.12 - 2012.11.21 | |
| | III ஆம் கட்டம் | 93 | 38 | 32 | | 2,445 |
| | தனிப்பட்ட<br>தனிப்பட்டதல்லாத | -<br>- | -<br>- | -<br>- | 2012.10.25 - 2012.11.30 | 210 |
| 2012 | 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை | 234 | 78 | - | 2012.08.30 - 2012.09.09 | 4,680 |
| 2011 | க.பொ.த. (சா.தர) ப் பரீட்சை | | | | 2012.06.02 - 2012.07.10 | 950 |
| | | பரீட்சார்த்திகளின் தொகை | | | | |
| | மீள் பரிசீலனை | 47,915 | 11,320 | 21,790 | | |
| 2011 | க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை | | | | | |
| | மீள் பரிசீலனை | 144,000 | | | 2012.02.05 - 2012.04.10 | 1,660 |
| 2011/ 2012 | ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை | | | | | |
| | II ஆம் ஆண்டு | | | | மதிப்பீட்டு நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டில் நடைபெறவில்லை. | |
| | தனிப்பட்ட | | | | | |

**மூலம் - மதிப்பீட்டுக் கிளை (பாடசாலைப் பரீட்சைகள்)**

## 1.4. புலன் விசாரணைப் பிரிவு

எந்த ஒரு பேதங்களுமின்றி பரீட்சார்த்திகளுக்கு நியாயம் கிடைக்கக் கூடியவாறு பரீட்சைகளை நடாத்துதல் பரீட்சைத் திணைக்களத்தின் அடிப்படை நோக்கமும் பொறுப்புமாகும். பரீட்சை சட்ட திட்டங்களை மீறக் கூடியவாறு பரீட்சார்த்திகள் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுதலும், பரீட்சை பணிக் குழுவினர் ஈடுபடும் முறையற்ற செயற்பாடுகளை புலன் விசாரணை செய்து பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை எடுத்தலும் இக்கிளையின் பிரதான பொறுப்பாகும். பரீட்சை மோசடிகள் / முறையற்ற செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகளை பெறுதலும் அது தொடர்பான நடவடிக்கைகளை வினைத்திறனுடன் நடாத்துதல் இப் பிரிவின் மூலம் நடைபெறுகின்றது.

| பரீட்சை | அறிக்கை செய்யப்பட்ட மோசடி செயற்பாடுகளின் எண்ணிக்கை | தண்டனை வழங்கப்பட்டோரின் எண்ணிக்கை | பெறுபேறுகள் விடுவிக்கப்பட்டோரின் எண்ணிக்கை | விசாரணை முடிவடையாத எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012 | 32 | - | 32 | - |
| 2. க.பொ.த. (சா.தர) ப் பரீட்சை - 2011 | 7978 | 112 | 7824 | 42 |
| 3. க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை - 2012 | 3560 | 48 | 3471 | 41 |
| **நிறுவனம் சார்ந்த பரீட்சைகள்** | **4875** | **420** | **4391** | **64** |

நீதிமன்றத்தின் நிருவாக செயற்பாடுகள் தொடர்பான ஆணையாளர் இலங்கை மனித உரிமைகள் தொர்பான ஆணைக்குழுவினால் வழக்குத் தொடரப்படும் விடயங்கள் தொடர்பான கோவைகளை ஆரம்பித்தல் மறுமொழி அறிக்கைகள் மற்றும் தேவையானவாறு ஆவணங்களை சட்ட மா அதிபரினால் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்தல், சட்ட மா அதிபரிடமிருந்து எழுத்து மூலமும், வாய்மொழி மூலமும் அறிவுரைகளைப் பெறுதல் நீதிமன்றத்தின் அறிவுறுத்தல்களுக்கேற்ப குறித்த நாட்களில் உத்தியோகத்தர்கள் நீதிமன்றத்திற்கு சமூகமளித்தல் போன்ற செயற்பாடுகள் யாவும் நடாத்தப்படுகின்றன.

மூலம் - புலன் விசாரணைக் கிளை

## 1.5. சான்றிதழ் பத்திரக் கிளை

இக்கிளைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களும், பங்களிப்புக்களும் பின்வருமாறு.

1. பின்வரும் பரீட்சை சான்றிதழ்களை வழங்குதல்.

    i. ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ்

    ii. பிரின்செட் ஆசிரிய பயிற்சிச் சான்றிதழ்

    iii. தகம் பாடசாலை இறுதிப் பரீட்சை

    iv. பௌத்த தர்மாச்சார்ய சான்றிதழ்

    v. அல் ஆலிம் சான்றிதழ்

    vi. பல்வேறு கைத்தொழில் பரீட்சைச் சான்றிதழ்

    vii. ஆங்கிலப் பேச்சு சான்றிதழ்

    viii. தேசிய இசை/ நடன சான்றிதழ்

    ix. மேல்நாட்டு இசைச் சான்றிதழ்

    x. வணிகவியல் சான்றிதழ்

    xi. பிரிவெனா இறுதிச் சான்றிதழ்

2. அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுறவுத் தாபனங்கள், சபைகள், ஆணைக்குழுக்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் துறை ஆகியவற்றின் ஊழியர்களின் க.பொ.த. (சா.தர), க.பொ.த. (உ.தர), ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை, தொழில்நுட்ப கல்லூரிகள், தேசிய நடன மற்றும் இசை போன்ற பல்வேறு வகை சான்றிதழ்களை உறுதி செய்தல்.

3. விண்ணப்பதாரிகளின் தேவைகளின் அடிப்படையில் தேசிய பரீட்சைகளின் பெறுபேறு அட்டவணைகள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் உட்பட வேறு நிறுவனங்களுக்கான சான்றிதழ்களின் பிரதிகளை வழங்குதல்.

4. பரீட்சைப் பெறுபேறு ஆவணங்களைப் பேணி வைத்திருத்தல்.

5. பெறுபேறு தொடர்பான ஆவணங்களின் பிழைகளைத் திருத்துதல்.

6. சான்றிதழ் பத்திரங்களின் அல்லது பெறுபேறு அட்டவணைகளில் செய்யப்படும் மோசடிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

| | வேலை விபரம் | ஒரு அலகின் பெறுமதி ரூபாய்களில் | அலகுகளின் எண்ணிக்கை | வருமானம் ரூபாய்கள் |
|---|---|---|---|---|
| 01. | வெளிநாடுகளுக்கு ஒரு நாள் சேவை மூலம் சான்றிதழ்களை வழங்குதல் | 500.00 | 39,366 | 19,683,000.00 |
| | - மேலதிக பிரதி ஒன்றுக்கு - | 200.00 | 12,400 | 2,480,000.00 |
| | - சுட்டெண் தேடுதல் - | 100.00 | 3,259 | 325,900.00 |
| 02. | வெளிநாடுகளுக்கு சாதாரண சேவை மூலம் சான்றிதழ்களை வழங்குதல் | 250.00 | 1,567 | 391,750.00 |
| | - மேலதிக பிரதி ஒன்றுக்கு - | 150.00 | 212 | 31,800.00 |
| | - சுட்டெண் தேடுவதற்கு - | 100.00 | 67 | 6,700.00 |
| 03. | தபாலிடுவதற்கு | 250.00 | 150 | 37,500.00 |
| 04. | உள்நாட்டிற்கு துணைப் பிரதி வழங்கல் | 100.00 | 522 | 52,200.00 |
| 05. | பரீட்சைப் பெறுபேறுகளை உறுதி செய்தல்<br>(அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரச நிருவாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்கள், பொலிஸ், முப்படைகள், சுகாதார, கல்வி ஆகிய அமைச்சுக்களைச் சேர்ந்த சகல நிறுவனங்களுக்கும்) | | 68,263 | அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படுவதில்லை. |
| | வங்கி, கூட்டுத்தாபனம், சபை, அதிகாரசபை மற்றும் தனியார் நிறுவனங்களிற்காக பெறுபேறு உறுதிசெய்தலும் தண்டப்பணமும் | | 7,023 | 702,300.00 |
| 06. | ஆசிரிய கலாசாலை சான்றிதழ் - சிங்களம் | | 223 | |
| | - தமிழ் | | 424 | கட்டணம் அறவிடப்படுவதில்லை |
| 07. | அல் ஆலிம் சான்றிதழ் | | 621 | |
| 08. | "பிரின்செட்" சான்றிதழ் | | 407 | |
| 09. | தொழில்நுட்ப கல்லூரிச் சான்றிதழ் | | 36 | |
| 10. | ஆரம்ப பிரிவென் சான்றிதழ் (துணைப் பிரதி) | | 242 | |
| 11. | பௌத்த தர்மாச்சார்ய சான்றிதழ் | | 1,736 | |
| 12. | தேசிய இசை/ நடன சான்றிதழ் | | 100 | |
| 13. | மேல்நாட்டு இசைச் சான்றிதழ் | | 60 | |

மூலம் - சான்றிதழ் பத்திரக் கிளை

## 1.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பாடசாலைப் பரீட்சைகளினதும் ஏனைய சகல பரீட்சைகளினதும் தரத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தரவுகளைச் சேகரித்தலும், வினாத்தாள்களையும் பெறுபேறுகளையும் பகுத்தாய்தலும், வினாத்தாள் தயாரித்தலில் ஈடுபடுகின்றவர்களையும் விடைத்தாள் புள்ளியிடுதலில் ஈடுபடுகின்ற பரீட்சகர்களையும் அவை தொடர்பாக அறிவுறுத்துதலும் இக்கிளையின் பிரதான பணிகளாகும். மேலும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு பணிகள் தொடர்பான இறுதிப் புள்ளிகளைப் பாடசாலைகளிலிருந்து பெற்றுக் கொள்ளலும் இக்கிளையின் பணியாகும். வினாத்தாள் பகுத்தாய்தலின் மூலம் பெற்றுக் கொண்ட தகவல்களின் துணையுடன் பரீட்சார்த்திகள் கீழ் அடைவு மட்டத்தை காட்டும் பாடத் துறைகளை இனங்கண்டு அவை தொடர்பாக அவற்றுடன் தொடர்புடைய பகுதியினரை அறிவுறுத்துதலும் இக்கிளை மூலம் செய்யப்படுகின்ற மற்றுமொரு முக்கிய பணியாகும்.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை மூலம் 2012 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட பணிகள் பின்வருமாறு.**

01. க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2011இன் பரீட்சைப் பெறுபேறுகளும் வினாத்தாள்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டு அத்தகவல்கள் பொருத்தமான சகல தரத்தினருக்கும் வழங்கப்பட்டது. மேலும் அது தொடர்பான கருத்தரங்கு தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்டு அறிவுறுத்தப்பட்டது.

02. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012இன் வினாத்தாள்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு மாணவரின் குறைபாடுகள் இனங்காணப்பட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

03. க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2011, க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2011 மற்றும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2011 ஆகியன தொடர்பான பாடசாலை அடைவுச் சுட்டிகள் தயாரிக்கப்பட்டு அவை பற்றி கல்வி தொடர்பாக அதிகாரமுள்ள சகலருக்கும் அறியத்தரப்பட்டுள்ளது. இதன் மூலம் சகல பாடசாலைகளினதும் அடைவு மட்டங்கள் பற்றிய தகவல்களை அறியக் கூடியதாக உள்ளது.

04. மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல்:

க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2010 இன் 11 பாடங்கள் தொடர்பான, மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்து பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டது. இது திணைக்களத்தின் வெப் தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த பாடங்களுக்கு மாணவர்கள் விடையளித்துள்ள விதம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, வினாக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விதம், ஒவ்வொரு வினாவிற்கும் புள்ளிகள் பெற்றுள்ள விதம் ஆகியனவும், வினாப் பகுதிகள்/ உப பகுதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் இலகுச் சுட்டி கணிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினா தொடர்பான விடைகளும், விடை எழுதும் போது பரீட்சார்த்திகள் வெளிக்காட்டிய பலவீனங்களும் அவற்றுக்கான தீர்வுகளும் முன் வைக்கப்பட்டுள்ளன. மேலும் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2011 தொடர்பான 11 பாடங்களினதும் மேற்படி மதிப்பீட்டு அறிக்கைகள் தற்போது அச்சுப் பதிக்கத் தயார் நிலையில் உள்ளன. இவ்வாறு க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2011 தொடர்பான 11 பாடங்களினது மதிப்பீட்டு அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

05. முதற் தடவையாக உருப்படி பகுப்பாய்வு துலங்கள் கோட்பாட்டைப் (Item Response Theory) பயன்படுத்தி க.பொ.த. (உ.தர)ப் பரீட்சை - 2011 இன் வினாத்தாள்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவை பிரதான கட்டுப்பாட்டு பரீட்சகர்களுக்கான அறிக்கையொன்றாக வழங்கப்பட்டு அவை தொடர்பாக அவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்

06. க.பொ.த. (சா.தரம்)- 2012 பரீட்சைக்கான வழிகாட்டும் கருத்தரங்குகளுக்கான வினாத்தாள்களையும் அவற்றுக்கான விடைகளையும் தயாரித்து பாடசாலைகளுக்கு அனுப்ப கல்வி அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

07. இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட சகல பரீட்சைகளினதும் பெறுபேறுகளின் பகுப்பாய்வுகள் அடங்கும் இரண்டு புள்ளிவிவரக் கைநூல் தொகுதிகள் தயாரிக்கப்பட்டு (2005 - 2007, 2008 - 2010 இற்கானவை) அவை சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்க நிறுவனங்கள், கல்வியியல் கல்லூரிகள் மற்றும் ஆசிரிய கலாசாலைகள் ஆகியவற்றுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

08. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டுச் செயன்முறை பற்றி அறிவுறுத்துவதற்காக இடைநிலை கல்வி நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்தின் (SEMP) உதவியின் கீழ் சலசினே நிறுவனத்தின் மூலம் "எழுத்துக்கள் கோபமில்லை" என்ற நாடகம் தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பப்பட்டுள்ளது.

மூலம்: - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கிளை

## 02. முகவர் நிறுவன சேவைகள் (Agency Functions)

### 2.1 ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை

பாடசாலைப் பரீட்சைகள் தவிர்ந்த வெளிநாட்டுப் பரீட்சைகளையும் வேறு பரீட்சைகளையும் ஒழுங்கு செய்து நடாத்துதல் தொடர்பான பணிகள் இக்கிளை மூலம் நடைபெறுகின்றன.

01.01.2012 தொடக்கம் 31.12.2012 வரையான காலப்பகுதியில் வருடாந்த வேலைத்திட்டத்திற்கு ஏற்ப இக்கிளையினால் நிறைவேற்றப்பட்ட பணிகள் பின்வருமாறு.

| நடாத்தப்பட்ட பரீட்சை வகைகள் | நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | வருமானம் ரூபாய்கள் | பரீட்சை மேற்பார்வை வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ஆட்சேர்க்கும் பரீட்சைகள் | 30 | 97669 | 48,509,496.00 | 5860 |
| சான்றிதழ் பரீட்சைகள் | 20 | 142936 | 10,032,419.00 | 8576 |
| வினைத்திறமை காண் தடை தாண்டும் பரீட்சைகள் | 48 | 7946 | 1,525,104.00 | 529 |
| பதவி உயர்த்தும் பரீட்சைகள் | 13 | 12146 | 2,444,047.00 | 728 |
| வெளிநாட்டுப் பரீட்சைகள் | 17 | 8186 | 729,643.00 | 820 |
| வேறு பரீட்சைகள் | 13 | 27527 | 2,189,539.00 | 1101 |
| **மொத்தம்** | **141** | **296410** | **65,430,248.00** | **17614** |

மூலம்: ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை

## 2.2 அந்தரங்கக் கிளை (நிறுவனம் சார் பரீட்சைகள்)

அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள். கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், நியதிச் சபைகள் மற்றும் சட்டக் கல்லூரி ஆகிய பல வகையான நிறுவனங்கள் தொடர்பாக மும்மொழிகளிலும் வினாத்தாள்களைத் தயாரித்தல் அவற்றைப் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு விநியோகித்தல் ஆகியனவும், வெளிநாட்டு பரீட்சைகளுக்காக பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கின்ற வினாத்தாள்களை பரீட்சை மத்திய நிலையங்களுக்கு விநியோகித்தல் ஆகியன தொடர்பான செயற்பாடுகளும் இக்கிளையின் வருடாந்த வேலைத்திட்டத்திற்கு ஏற்ப செய்யப்படும் செயற்பாடுகளாகும்.

| நடாத்தப்பட்ட பரீட்சை வகைகள் | நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | மொழி மூலத்தின் படி தயாரிக்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை | | | | பதிப்பிக்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | மொத்தம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | மொத்தம் |
| ஆட்சேர்க்கும் பரீட்சைகள் | 34 | 244,179 | 77 | 72 | 66 | 215 | 231,100 | 22,800 | 11,700 | 265,600 |
| சான்றிதழ் பரீட்சைகள் | 24 | 129,863 | 210 | 84 | 91 | 384 | 132,200 | 26,450 | 9,700 | 162,350 |
| வினைத் திறன்காண் தடைதாண்டும் பரீட்சைகள் | 38 | 11,673 | 152 | 116 | 60 | 328 | 14,150 | 4,215 | 2,900 | 21,265 |
| பதவி உயர்த்தும் பரீட்சைகள் | 14 | 12,914 | 84 | 66 | 54 | 204 | 19,500 | 7,800 | 5,950 | 33,250 |
| வெளிநாட்டுப் பரீட்சைகள் | 15 | 42,815 | - | - | - | - | - | - | - | - |
| களனிப் பல்கலைக்கழகப் பரீட்சைகள் | 02 | 25,600 | - | | - | - | - | - | - | - |
| **மொத்தம்** | **127** | **467,044** | **523** | **338** | **271** | **1,132** | **396,950** | **61,265** | **30,250** | **482,465** |

மூலம் - அந்தரங்கக் கிளை (நிறுவனம் சார் பரீட்சைகள்)

## 2.3 மதிப்பீட்டுக் கிளை ( நிறுவனம் சார் பரீட்சைகள்)

மேற்படி வேறு பரீட்சைகளினது மதிப்பீட்டு வேலைகள் யாவும் இக்கிளையின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகளாகும். இக்கிளையின் 2012 ஆம் ஆண்டின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின்படி பின்வரும் பரீட்சைகள் நடாத்தப்பட்டு, மதிப்பீடும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

| நடாத்தப்பட்ட பரீட்சை வகைகள் | நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுத்தப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஆட்சேர்க்கும் பரீட்சைகள் | 31 | 179,994 | 6000 |
| பதவி உயர்த்தும் பரீட்சைகள் | 11 | 21,050 | 900 |
| சான்றிதழ் பரீட்சைகள் | 20 | 97,278 | 2750 |
| வினைத்திறன் காண் தடைதாண்டும் பரீட்சைகள் | 48 | 13,842 | 210 |
| வேறு பரீட்சைகள் (வெளிநாட்டுப் பரீட்சைகள் உட்பட) | 16 | 35,881 | 125 |
| **மொத்தம்** | **126** | **348,045** | **9985** |

மூலம் - அந்தரங்கக் கிளை (நிறுவனம் சார் பரீட்சைகள்)

## 2.4 பெறுபேறுகள் கிளை (நிறுவனம் சார் பரீட்சைகள்)

திணைக்களத்தினால் நடாத்தப்படும் சகல நிறுவனம் சார் பரீட்சைகளினதும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பான பணிகள் இக்கிளையினால் செய்யப்படும்.

2012.01.01 தொடக்கம் 2012.12.31 வரையான காலப்பகுதியில் இக்கிளையின் மூலம் வெளியிடப்பட்ட பெறுபேறுகள் தொடர்பான புள்ளிவிவரங்கள் வருமாறு.

| நடாத்தப்பட்ட பரீட்சை வகைகள் | நடாத்தப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டுக்காக ஈடுபடுத்தப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஆட்சேர்க்கும் பரீட்சைகள் | 33 | 210,468 | 34 |
| பதவி உயர்த்தும் பரீட்சைகள் | 18 | 7,956 | 13 |
| சான்றிதழ் பரீட்சைகள் | 18 | 153,877 | 34 |
| வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகள் | 46 | 14,561 | 39 |
| வேறு பரீட்சைகள் (வெளிநாட்டுப் பரீட்சைகள் உட்பட) | 04 | 31,860 | 09 |
| **மொத்தம்** | **118** | **418,722** | **129** |

மூலம் - பெறுபேறுகள் கிளை (பாடசாலை பரீட்சைகள் அல்லாத)

## 03. பொது சேவைகள்

### 3.1 நிறுவனக் கிளை

திணைக்களத்தின் பொது நிருவாகம், நிறுவனம் சார் பணிகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் பேணல் ஆகிய பணிகள் நிறுவனம் சார்ந்த கிளையின் பங்களிப்பாகும். உத்தியோகத்தர்களையும் பணிக் குழுவினர்களையும் ஆட்சேர்த்தல், சேவையில் ஈடுபடுத்தல், இடமாற்றம் செய்தல், ஓய்வூதியம் வழங்குதல் ஆகியன அவற்றுள் அடங்கும். திணைக்களத்தின் பாதுகாப்புச் செயற்பாடுகளைப் பேணுதலும், பராமரித்தலும், சேவையை மதிப்பீட்டுக்கு உட்படுத்தலும் நிருவாகம் செய்தலும் நிறுவனக் கிளையின் ஏனைய பணிகளாகும்.

திணைக்களத்தின் பணிக்குழுவினரின் கட்டமைப்பு பின்வருமாறு அமையும்.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| இலங்கை கல்வி நிருவாக சேவை i,ii.iii | 73 | 57 | 16 |
| இலங்கை கணக்காளர் சேவை | 04 | 03 | 01 |
| நிருவாக உத்தியோகத்தர் | 02 | 01 | 01 |
| தகவல் மற்றும் தொழினுட்பச் சேவை i,ii.iii | 25 | 44 | - |
| அச்சக அதிபர் | 01 | - | 01 |
| மொழிபெயர்ப்பாளர் | 02 | 01 | 01 |
| வரவு செலவுத் திட்ட உதவியாளர் | 01 | 01 | - |
| விடுதி மேற்பார்வையாளர் | 01 | - | 01 |
| உதவி விடுதி மேற்பார்வையாளர் | 01 | 01 | - |
| கட்டட மேற்பார்வையாளர் | 01 | 01 | - |
| முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உத்தியோகத்தர்கள் | 248 | 196 | 52 |
| அச்சகம் | 49 | 45 | 18 |
| அலுவலக உதவியாளர்கள் | 125 | 87 | 12 |
| சாரதிகள் | 16 | 20 | - |
| தரவு நிரற்படுத்துனர்கள் | * 37 | 15 | - |
| பரீட்சை தரவு உதவியாளர் | * * 49 | 45 | 04 |
| திணைக்களத்தின் கனிட்ட ஊழியர்கள் (நீர்க்குழாய் திருத்துனர்கள், லொறி உதவியாளர்கள், சமையற்காரர்கள் ஆகியோர்) | 25 | 25 | - |
| மொத்தம் | 660 | 542 | 107 |

* தற்போது பதவி வகிப்பவருக்குத் தனிப்பட்ட முறையில் பொருந்தும் வகையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

* * ஆட்சேர்க்கப்பட்டுள்ளது.

மூலம் - நிறுவனக் கிளை

### 3.2 அஞ்சல் கிளை

பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பெயருக்கும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஏனைய அலுவலர்களின் பெயருக்கும் கிடைக்கின்ற சகல கடிதங்களையும் பொறுப்பேற்று, வகைப்படுத்தி, அந்தந்தக் கிளைகளுக்கும், அலுவலர்களுக்கும் அனுப்புதலும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வெளியே அனுப்பப்படுகின்ற கடிதங்களை இலங்கை அஞ்சல் திணைக்களத்திற்குப் பாரங்கொடுத்தல், திணைக்களத்தை முதன்மைப்படுத்தி நடாத்தப்படுகின்ற சகல கடிதங்களினதும் இரகசியத் தன்மையைப் பாதுகாத்தல் ஆகியவற்றை இக்கிளையின் பணியாகக் குறிப்பிடலாம்.

| பணிகள் | எண்ணிக்கை |
|---|---|
| கிளைக்கு கிடைத்துள்ள சாதாரண கடிதங்களின் எண்ணிக்கை | 132,805 |
| பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை | 645,859 |
| இக்கிளை அஞ்சல் திணைக்களத்திற்கு கையளித்த சாதாரண கடிதங்களின் எண்ணிக்கை | 600,320 |
| சாதாரண கடிதங்களை அஞ்சலிடுவதற்குச் செலவான பணம் | ரூ. 7,480,019.00 |
| பதிவுத் தபால்களின் எண்ணிக்கை | 16,720 |
| பதிவுத் தபால்களை அஞ்சலிடுவதற்குச் செலவான பணம் | ரூ. 901,935.00 |

மூலம் - அஞ்சல் கிளை

### 3.3.1 நிதிக் கிளை

திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பலவகையான பரீட்சைகளை ஒழுங்கமைத்தல், நிருவகித்தல், மதிப்பிடல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல், பெறுபேறுகளை உறுதி செய்யும் போதும், சான்றிதழ்களை வழங்கும்போதும் அது தொடர்பாக ஏற்படும் வரவுகளையும் செலவுகளையும் முகாமைத்துவம் செய்தல் ஆகியன இக்கிளையின் செயற்பாடுகளாகும். இவற்றுக்கு மேலதிகமாக திணைக்களத்துடன் தொடர்புடைய சகல கட்டுமான வேலைகளும், அபிவிருத்தி வேலைகளும் மற்றும் முதலீட்டுச் சொத்துக்களைப் பெறுதலும் இக் கிளையின் பொறுப்புக்களாகும்.

சான்றிதழ் வழங்கும் போதும், இரண்டு தடவைக்கு மேலதிகமாக ஒருவர் பரீட்சைக்குத் தோற்றும்போதும், மீள்பரிசீலணைகளின் போதும், ஒழுங்கமைத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையினால் நடாத்தப்படுகின்ற சில பரீட்சைகளுக்குத் தோற்றும்போதும் பரீட்சார்த்திகளிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்கள் திணைக்களத்தின் வருமானங்களாக அமைகின்றன.

2012 ஆம் ஆண்டுக்கான நிதித் தகவல்களை பின்வருமாறு பொழிப்பாகக் காட்ட முடியும்.

**2012 ஆம் ஆண்டுக்கான அறிக்கை**

| **செலவு தலைப்பின் கீழான செலவுகள்** | **வருடாந்த ஒதுக்கீடு (ரூபாய்கள்)** | **2012.12.31 ஆம் திகதிக்கான செலவுகள் (ரூபாய்கள்)** |
|---|---|---|
| தனிப்பட்ட சம்பளங்கள் வேதனாதிகள் | 166,725,000.00 | 183,546,546.43 |
| ஏனைய மீண்டுவரும் செலவினங்கள் | 1,580,315,000.00 | 1,560,123,003.55 |
| மேலதிக ஒதுக்கீடுகள் | 20,000,000.00 | |
| மொத்த மீண்டுவரும் செலவினங்கள் | **1,767,040,000.00** | **1,743,669,549.98** |
| **மூலதனச் செலவுகள்** | | |
| **புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி வேலைகள்** | | |
| கட்டட நிருமாணங்கள் | 1,350,000.00 | 1,328,859.28 |
| இயந்திர உபகரணங்கள் | 3,800,000.00 | 1,914,033.09 |
| வாகனங்கள் | 3,100,000.00 | 2,627,327.53 |
| **மொத்தம்** | **8,250,000.00** | **5,870,219.90** |
| | | |
| **மூலச் சொத்துக்களைப் பெற்றுக் கொள்ளல்** | | |
| தளபாடங்கள் காரியாலய உபகரணங்கள் | 1,100,000.00 | 1,074,816.76 |
| பொறிகளும் இயந்திராதிகளும் | 1,600,000.00 | 1,594,730.96 |
| **மொத்தம்** | **2,700,000.00** | **2,669,547.72** |
| | | |
| **வேறு மூலதனங்கள்** | | |
| அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமொன்றைக் கட்டி எழுப்ப மானிதவள மற்றும் மூதலீட்டு செயற்றிட்டங்கள் (இலங்கை அரசாங்கமும் - உலக வங்கியும்) | 10,000,000.00 | |
| **மொத்தம்** | **10,000,000.00** | |
| **மூலதனத்தின் மொத்த கூட்டுத் தொகை** | **20,950,000.00** | **8,539,767.62** |
| வருடாந்த வருமானம் | மதிப்பிடப்பட்ட | உண்மையான வருமானம் (ரூபாய்கள்) |
| விற்பனை மற்றும் கட்டணம் - பரீட்சை வருமானங்கள் | 150,000,000.00 | 263,015,515.87 |
| **அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு** | எல்லை (ரூ.) | 2012.12.31 ஆம் திகதி உண்மையான (ரூ.) |
| ஆகக் கூடிய எல்லை | 18,000,000.00 | 12,499,194.72 |
| மிகக் குறைந்த எல்லை | 13,000,000.00 | 17,659,185.94 |
| ஆகக் கூடிய மீதி எல்லை | 115,000,000.00 | 70,954,075.74 |

மூலம் - நிதிக்கிளை

### 3.3.2 வழங்கல் கிளை

சகல பரீட்சைகளுக்கும் தேவையான மீண்டுவரும் பொருட்களை விலைக்கு வாங்குதலும் விநியோகித்தலும் பராமரித்தலும் இக்கிளையினால் நிறைவேற்றப்படும் பணிகளாகும்.

முக்கியமாக 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட க.பொ.த (சா.தரம்), க.பொ.த (உ.தரம்), 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, மற்றும் ஏனைய நிறுவனம் சார்ந்த பரீட்சைகள், மற்றும் ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் பலவற்றுக்கும் தேவையாக சகல எழுது பொருட்களும் எந்த வித தாமதமுமின்றி விநியோகிக்கப்பட்டன. இதன்கீழ் மேற்படி பரீட்சைகளுக்குத் தேவையாகவிருந்த விடை எழுதும் புத்தகங்கள், தாள்கள், ஓ.எம்.ஆர். தாள்கள், கடித உறைகள், நூல்கள், பசைகள் ஆகிய சகல எழுது பொருட்களும் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து விலைமனுகோரி, தொழினுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப விலைக்குப் பெறப்பட்டன.

கடந்த ஆண்டுகளில் அழிக்கப்பட வேண்டிய விடைத்தாள்கள், வினாத்தாள்கள் மற்றும் ஏனைய அகற்றப்பட வேண்டிய இரகசிய தாள்கள் ஆகியவற்றை மீள் சுற்றோட்டம் செய்வதற்காக வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திணைக்களத்திற்குச் சொந்தமான சகல வாகனங்களையும் பராமரித்தல், கடமைத் தேவைகளுக்காக வாகனங்களைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியன இக்கிளையின் பணிகளாகும்.

வருடாந்த பொருள் கணக்காய்வு குழுக்கள் மூலம் பொருட்களைக் கழித்தொகுக்குவதற்காக கழித்தொகுக்கும் குழுவின் அங்கீகாரத்தின்படி களஞ்சியத்திற்குக் கையளிக்கப்படுகின்ற பொருட்களுக்காக விலை மனுகோரி ஆகக் கூடிய விலையைச் சமர்ப்பிக்கும் வாங்குனருக்கு விற்பனை செய்து அதன் பெறுமதியை அரச வருமானக் கணக்கில் வரவு செய்தல்.

திணைக்களத்திற்குச் சொந்தமான ஒவ்வொரு கிளையிலும் உள்ள நிழற்படப் பிரதியெடுக்கும் இயந்திரங்களைத் திருத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் ஆகியன தொடர்பான நடவடிக்கைகளைச் செய்தல்.

மூலம் - வழங்கல் கிளை

3.4 அச்சகம் ( இரகசிய மற்றும் இரகசியமில்லாத)

தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சைக்குமான சேவைகள் மூலம் நிறைவேற்றப்படுகின்ற பரீட்சைகளை நடாத்துதல், மதிப்பிடல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புடைய மிகவும் தனித்துவமான செயற்பாடுகள் பல அச்சகத்தின் மூலம் இக்கால கட்டத்தினுள் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன் தொடர்புடைய சுருக்கமான அறிக்கையொன்று பின்வருமாறு.

**2012.01.01 தொடக்கம் 2012.12.31 வரையான காலகட்டத்தினுள் அச்சுப் பதிக்கப்பட்ட வினாத்தாள்கள் மற்றும் வேறு பரீட்சை எழுது பொருட்கள்**

| | **எண்ணிக்கை** |
|---|---|
| 2012 க.பொ.த (உ.தர)ப் பரீட்சைக்காக மும்மொழிகள் மூலமும் அச்சுப் பதிப்பிக்கப்பட்ட வினாத்தாள்கள் (புதிய/ பழைய) | **3,124,850** |
| புத்தகங்களாக அச்சுப் பதிக்கப்பட்ட வினாத்தாள்கள் (நான்கு பாடங்களுக்கான) | **1,874,550** |
| 2012 க.பொ.த (உ.தர)ப் பரீட்சை புவியியல் பாடத்திற்காகத் தனித்தனியாக அச்சுப் பதிப்பிக்கப்பட்ட வர்ணத் தேசப்படங்களும் கறுப்பு வெள்ளை தேசப்படங்களும் (புதிய / பழைய) | **101,900** |
| 2012 ஆண்டின் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்காக இரண்டு மொழிகளிலும் அச்சுப் பதிப்பிக்கப்பட்ட வினாத்தாள்கள் | **674,000** |
| க.பொ.த (சா.தர)ப் பரீட்சை 2012 இற்காக மும்மொழிகள் மூலமும் அச்சுப் பதிப்பிக்கப்பட்ட வினாத்தாள்கள் | **7,204,400** |
| 2012 க.பொ.த (சா.தர)ப் பரீட்சை புவியியல் பாடத்திற்காக அச்சுப் பதிப்பிக்கப்பட்ட வர்ணத் தேசப்படங்கள் | **127,000** |
| இப்பரீட்சை தொடர்பாக வர்ண சித்திரங்களுடன் அச்சுப் பதிப்பிக்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை | **283,200** |
| சித்திரப் பாடத்திற்காக நிறச் சித்திரங்களுடன் அச்சுப் பதிப்பிக்கப்பட்ட வினாத்தாள்களின் எண்ணிக்கை | **156,200** |

**அச்சுப் பதிப்பிக்கப்பட்ட வேறு எழுத்தாவணங்கள் (அந்தரங்கமானவை அல்லாத)**

| | எண்ணிக்கை |
|---|---|
| 1. பரீட்சைகளுக்குத் தேவையான ஜேர்னல் புத்தகங்கள் மற்றும் அறிவித்தல் புத்தகங்கள் | 165,023 |
| 2. பல்வேறு பரீட்சைகளினதும் சான்றிதழ்கள் | 92,972 |
| 3. பலவகையான சுட்டிகள் | 3,393,850 |
| 4. பலவகையான மாதிரிப் படிவங்கள் | 3,608,500 |
| 5. பலவகையான கடிதத் தலைப்புக்கள் | 250 |
| 6. உறைகளை அச்சுப்பதித்தல் | 639,160 |
| 7. கோவை உறைகளை அச்சுப்பதித்தல் | 8,250 |
| 8. சான்றிதழ் கிளைக்காக அச்சுப் பதிப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் | 51,850 |
| 9. பெறுபேறு பட்டியல்கள்/ பெறுபேறு குறிப்புக்களை அச்சுப்பதிப்பித்தல் | 302,130 |
| 10. வேறு நானாவித அச்சு வேலைகள் | 2,175,320 |

**வேறு நானாவித அச்சுப் பதித்தல்கள்**

- வெளி உறை
- விருந்தினர் அட்டை
- கைப்பிரசுரங்கள் (சிங்களம், தமிழ்)
- அடையாள அட்டைகள்
- வரைபு தாள்கள்
- க.பொ.த(சா.தர), க.பொ.த (உ.தர) எம். சி. கியு விடைத்தாள்கள்
- சித்திரம் வரையும் தாள் (இரண்டு பக்க)
- பரீட்சை மண்டப அறிவித்தல்கள்
- பரீட்சை நேரசூசிகள் ( க.பொ.த (சா.தர), க.பொ.த (உ.தர), தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை)
- ஒரு நாள் சேவை மற்றும் சாதாரண சேவை அட்டைகள்
- அனுமதி அட்டைகள்
- விருந்தினர் அனுமதி அட்டைகள்
- ஓ.எம்.ஆர். விடைத்தாள்களை மதிப்பிடும் படிவங்கள்
- வாகன அனுமதிப் பத்திரங்கள்

மூலம் - அச்சகம்

### 3.5 கணனிக் கிளை

இத்திணைக்களத்தினால் நடாத்தப்படும் சகல பரீட்சைகளினதும் தரவுகள் / புள்ளிகளை உள்ளிடுதல், ஒழுங்குபடுத்தல், நடைமுறைப் பாவனைக்கு உகந்த முறையில் சீரமைத்தல் என்பவற்றினூடாக அனுமதிப் பத்திரம், வரவுப் பதிவேடு, பெறுபேற்றுப் பத்திரம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றைத் தயார்செய்து அச்சிடல் இக்கிளையின் பிரதான பொறுப்பாகவுள்ளது. பரீட்சைகளுடன் தொடர்பான தரவுகளைப் பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தல் இந்தக் கிளையின் மற்றுமொரு பிரதான பொறுப்பாகும். கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பாடசாலை, வலய, மாவட்ட, தேசிய ரீதியிலான அடைவு குறித்த தரவுகளை ஆய்வு, அபிவிருத்திக் கிளையின் தேவைகளுக்காக பெற்றுக் கொடுப்பதும் வேறு அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் பயனுறுதி வாய்ந்த தேவைகளுக்காகக் கோரும் தகவல் அறிக்கைகள், பகுப்பாய்வுகளை அவற்றுக்கு பெற்றுக் கொடுப்பதும் இக்கிளையினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாகும். சகல பரீட்சை தொடர்பிலும் கணனி நிகழ்ச்சித் திட்டம் தயாரித்தல், நெறிப்படுத்திப் பாதுகாப்பதுவும் இக்கிளையிலேயே நடைபெறுகிறது.

மூலம் : கணனிக் கிளை

### 3.6 தரவு நிரற்படுத்தும் கிளை

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தில் கணனி மயப்படுத்தப்பட்டு பேணப்பட்டு வருகின்ற பரீட்சைகள் தொடர்பான சகல தரவுகளையும் அவற்றின் திருத்தங்களையும் பதிவு செய்தல் மற்றும் மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் பரீட்சைப் புள்ளிகளைப் பதிதல் ஆகியன இக்கிளையின் பணிகளாகும். இங்கு பாடசாலை பரீட்சைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் பெறுபேறுகள் கிளை, பாடசாலை பரீட்சைகளை மதிப்பிடல் கிளை, ஒழுங்கமைத்தல் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, மற்றும் பெறுபேறுகள் (நிறுவனம் சார்ந்த பரீட்சைகள்) ஆகிய கிளைகள் மூலம் மேற்படி தகவல்கள் இக்கிளைக்கு வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட கிளைகள் மூலம் 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்த சகல கணனி மயப்படுத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்பான செயற்பாடுகளும் குறித்த காலத்தினுள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

மூலம் - தரவு நிரற்படுத்தும் கிளை

### 3.7 திட்டமிடல் மற்றும் வழிப்படுத்தும் கிளை

**01. பரீட்சைத் திணைக்களத்தின் பௌதிக வளத் தேவைகளைக் கணக்கிடலும் அறிக்கையொன்றைத் தயாரித்தலும்**

- கிளைத் தலைவர்களை அழைத்து பௌதிக வளத் தேவைகளை இனங்காணல்.
- மேற்படி தேவைளை முதற் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம் என்ற வகையில் தேவைக்கேற்ப நிரற்படுத்துதல்.
- மடிக்கணனி, பல்ஊடகம், எறியி, அச்சுப் பதி கருவி ஆகியவற்றைப் பெறுவதற்காக வகைகுறிப்புக்களைத் தயாரித்தல்.

**02. புதிய பல் வேலை கட்டிடத்தை அமைத்தல்.**

- புதிய கட்டிடத்தை அமைக்கத் தேவையான ஆலோசனை சேவைகளைப் பெற அரச பொறியியற் கூட்டுத்தாபனத்துடன் சேர்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- மேற்படி கட்டிடத்தை நிருமாணிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள காணியில் அளத்தல் வேலைகளுக்காக Survey Engineering Company Ltd நிறுவனத்திற்கு வேலைகளைக் கையளித்து வேலைகளை நிறைவேற்றிக் கொள்ளல்.

**03. கணனி நிகழ்சித் திட்டங்களை நிருமாணித்தலும் அபிவிருத்தி செய்தலும்**

- கொழும்பு மற்றும் மொறட்டுவை பல்கலைகழகங்கள் இரண்டினதும் கணனிப் பிரிவைச் சேர்ந்த நிபுணர்களுடன் கலந்துரையாடி ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

**04. பரீட்சை பணிக்குழுவினரைப் பயிற்றுவிப்பதற்காக பயிற்சி மொடியூல்களைத் தயாரித்தலும் கணனி நிகழ்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தலும்**

- பயிற்சி பெற்ற பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவினரைக் கொண்ட பிரிவொன்றை உருவாக்கத் தேவையான ஆரம்ப செயற்பாடுகளை நிறைவேற்றல். (பத்திரிகை அறிவித்தல்கள்/விண்ணப்பப் படிவங்கள் திட்டமிடல் ஆகியன)
- பயிற்சிப் பிரிவினரை வழிப்படுத்தத் தேவையான மென்பொருட்களைத் தயாரிக்க நடவடிக்கைகளை எடுத்தல்.
- பயிற்சி மொடியூல்களைத் தயாரிக்கத் தேவையான செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்.
- அதற்காக வதிவிட செயலமர்வொன்றை ஒழுங்கு செய்தல்.

**05. 2013 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல்.**

- 2013 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டங்களை சகல கிளைகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளல்
- ஒவ்வொரு கிளையிலிருந்தும் பெறப்பட்ட செயற்பாட்டுத் திட்டங்களின் அடிப்படையில் திணைக்களத்தின் முழுமையான வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்து அமைச்சுக்கு சமர்ப்பித்தல்.

**06. புதிய கிளையொன்றைத் தாபித்தலும் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளலும்**

மூலம் - திட்டமிடல் மற்றும் வழிப்படுத்தும் கிளை